00185

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்ட கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சி திட்டம்
மட்டம் 4
தொடர் மதிப்பீட்டு பரீட்சை 1 – 2022/2023
LLU4806/LWU2312 குற்றவியல் சட்டம்
காலம் - 1 மணித்தியாலம்

திகதி - 27 செப்டம்பர் 2023 நேரம்- மு.ப 11.30 – பி.ப 12.30

பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒரு (01) வினாவுக்கு மட்டும் விடை எழுதவும்

தெளிவற்ற எழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "மேன்முறையீடு செய்தவர் மீது சாட்டப்பட்ட குற்றத்தின் இன்றியமையாத அங்கமாக குற்றமனம் (Mens rea) உள்ளது. இந்தச் சட்டத்தை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் வழக்காளி தரப்பு நிரூபிக்க வேண்டும் என்ற பொதுச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அவசியத்தேவையை குற்றவியல் கட்டளை சட்டம் எங்கும் நிராகரிக்கவில்லை"

-Van der Hultes vs. Attorney General (1989) 1 SLR 204 at 215

மேற்கண்ட கூற்றின் அடிப்படையில்,

(அ) கவனயீனம் (negligence) மற்றும் அசட்டுத்துணிவு (recklessness) ஆகிய கோட்பாடுகளை குற்றமன கொள்கையின் வடிவங்களாக வரையறுக்கவும்

(ஆ) இவை எவ்வாறு மன எண்ணத்திலிருந்து (intention) வேறுபடுகின்றன என்பதை விளக்கவும், தொடர்புடைய தீர்ப்பு சட்டம் மற்றும் பொருத்தமான நடைமுறை எடுத்துக்காட்டுகள் என்பவற்றுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

**( 20 புள்ளிகள்)**

2. (அ) "சாட்சிகள் பொய் சொல்லலாம் ஆனால் சூழ்நிலைகள் தமக்காக பேசுகின்றன"

Ashok Dhondiram Dhavale vs The State of Maharashtra (Crim. Appl No.904/2018)

மேற்கண்ட கூற்றின் அடிப்படையில்,

"நேரடி சான்றுகள்" (direct evidence) மற்றும் "சூழ்நிலை சான்றுகள்" (circumstantial evidence) ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாட்டை விளக்குக நடைமுறை உதாரணங்களுடன் உமது விடையயளிக்கவும்.

**(10 புள்ளிகள)**

(ஆ) பின்வரும் கருத்துக்களை உமது சொந்த வார்த்தைகளில் விளக்கவும்.

(i) நிகழ்வுகள் (facts)
(ii) ஒப்புதல் வாக்குமூலம் (confessions)

**(5 x 2 = 10 புள்ளிகள்)**

**(மொத்த புள்ளிகள் 10+10=20)**

*பதிப்புரிமை பெற்றது*